Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 21, 2023

செவ்வாய்க்கிழமை மார்ச் 21, 2023 | ஒளி: 08 கதிர்: 233 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free



கபரகலை தோட்டத்தின் சிறு பகுதியை

# விழுங்கியது மண்சரிவு

5 பேர் படுகாயம் | 62 குடும்பங்கள் பாதிப்பு | 220 நபர்கள் நிர்க்கதி

3 வீடுகள் முழுமையாக சேதம் | 20 வீடுகளுக்கு சிறிய சேதம்

■ *காமினி பண்டார*

பண்டாரவளை, பூனாகலை கபரகலைப் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் நான்கு லயன் குடியிருப்புகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 62 குடும்பங்களைச் சேர்ந்த 220 இற்கும் மேற்பட்டோர் பூனாகலை இலக்கம் 03 தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தத்தில் சிக்கிக் காயமடைந்த 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தம் ஞாயிற்றுக்கிழமை (19) இரவு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

‘ஹரக் கட்டா’வின் மனு விவகாரம்:

## ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு காலக்கெடு

‘ஹரக் கட்டா’ என்றழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவின் பாதுகாப்பை சட்டத்துக்கு உட்பட்டு உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு குறித்த மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (20) கால அவகாசம் வழங்கியது.

தொடர்ச்சி P2

13 உயிர்களை பலி எடுத்த அதே இடம்:

## பள்ளத்தில் கார் பாய்ந்து விபத்து; ஆசிரியர் பலி



பதுளை- செங்கலடி வீதியின், பசறை 13 ஆவது மைல்கல் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து பயணத்தை ஆரம்பித்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 40 அடி பள்ளத்தில் பாய்ந்து, பிரதான வீதியில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த ஆசிரியர் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மண்சரிவு அபாயம்



கடும் மழையுடன் நிலவும் சீரற்ற வானிலை காரணாக பதுளை, காலி, மாத்தளை மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தால் இன்று (21) காலை 8.30 மணிவரை மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஐஎம்எப் ஒப்பந்தத்தின்படி செயற்படுகையில்

## மிகக் கடுமையான பிரச்சினைகள் வரும்

**டொலர் மீண்டும் உயரும் என்கிறார் சம்பிக்க எம்.பி**



சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) ஒப்பந்தத்துக்கமைய நாம் செயற்படும்போது மிகக் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வலயத்தில் இருந்ததால் நிர்வாகமே பொறுப்பு

**அமைச்சர் ஜீவன் சுட்டிக்காட்டு**



பண்டாரவளை, பூனாகலை கபரகல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் தோட்ட நிர்வாகமே பொறுப்புக்கூற வேண்டும் என்று அமைச்சரும் இ.தொ.காவின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## இலங்கையின் 32% குடும்பங்கள் உணவு பாதுகாப்பற்றவை

இலங்கையிலுள்ள 32 சதவீதனமான குடும்பங்களுக்கான உணவு பாதுகாப்பற்றவை என்று 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கான உணவுத் திட்டத்தின் வீட்டு உணவுப் பாதுகாப்பு ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

அனைத்து தேசிய பாடசாலைகளிலும்

## மார்ச் 30 முதல் ஆங்கில பேச்சு மொழி கற்பிக்கப்படும்



எதிர்வரும் மார்ச் 30ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தேசிய பாடசாலைகளிலும் ஆங்கில பேச்சு மொழியை கற்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டங்களுக்கு எதிராக

## குற்றவியல் வழக்குகளை தாக்கல் செய்யவும்

**சட்டமா அதிபரிடம் மத்திய வங்கி கோரிக்கை**

தடைசெய்யப்பட்ட மூன்று பிரமிட் திட்டங்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்யுமாறு இலங்கை மத்திய வங்கி சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, பாஸ்ட்3சைக்கிள் இன்டர்நஷனல், ஸ்போர்ட் செயின் அப் சொசைட்டி மற்றும் ஒன்மக்ஸ் டிரி ஆகிய தடைசெய்யப்பட்ட 3 பிரமிட் திட்டங்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் மத்திய வங்கி விசேட விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

தொடர்ச்சி P2

தேசபந்து தென்னகோனுக்கு எதிரான

## நீதவான் விசாரணைகளை தொடர்வதற்கு தடை நீடிப்பு



மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் இடம்பெறும் நீதவான் விசாரணைகளைத் தொடர்வதற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை மார்ச் 28ஆம் திகதி வரை நீட்டித்து மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (20) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

## சின்னத் தேர்தலில் போட்டியிட வந்த அரச ஊழியர்கள் அல்லல்

**நடவடிக்கை எடுக்குமாறு எம்.பிக்கள் இருவர் கடிதம்**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்த அரச ஊழியர்களின் சம்பள இழப்பால், அவர்களது குடும்பங்கள் தற்போது அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, காமினி வலேபொட ஆகியோர் கடிதம் அனுப்பியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## முல்லையில் தமிழர் நிலங்கள் அபகரிப்பு

■ *விஜயரத்தினம் சரவணன்*

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அரச திணைக்களத்தைச் சேர்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டு, அபகரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில், கொக்குத்தொடுவாய்

தொடர்ச்சி P2

இரண்டு பிரதான நிறுவனங்களும்

## ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் மறைமுகமாகச் செல்கின்றன



இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு பிரதான நிறுவனங்களும் இன்று (நேற்று) முதல், மறைமுகமாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தற்போதைய ஜனாதிபதி மக்களின்

## மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகிறார்



நாட்டு மக்களின் அரசியல் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை அரசாங்கம் மீறி, நாட்டின் பக்கச்சார்பற்ற நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளையும், சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளையும் அரசியல் சதித்திட்டங்களினூடாக அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தி, மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிவருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

12 இலட்சம் விவசாயிகளுக்கு

## நேற்று முதல் சேற்று உரம் விநியோகம்

மூன்று போகங்களின் பின்னர் நாட்டிலுள்ள 12 இலட்சம் விவசாயிகளுக்கு திங்கட்கிழமை (20) முதல் சேற்று உரம் என்று அழைக்கப்படும் ரிஎஸ்பி உரம் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 36,000 மெட்ரிக் தொன் உரம் 16ஆம் திகதி அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

அதில் 11,537 மெட்ரிக் தொன் உரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து மாவட்டங்களின் விவசாயிகளுக்கும் திங்களன்று (20) பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க...

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் மடகஸ்காரில் கைதுசெய்யப்பட்ட ஹரக் கட்டா, குடு சலிந்து என்றழைக்கப்படும் சலிந்து மல்ஷிக உள்ளிட்ட 8 சந்தேகநபர்களும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை ரயில்வே திணைக்களத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற உதவி இயந்திர பொறியியலாளர் நெல்சன் மெர்வின் விக்கிரமரத்ன எனும் ஹரக் கட்டாவின் தந்தையால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டபோதே கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட மாகந்துரே மதுஷ், பொலிஸ் காவலில் இருந்தபோது கொல்லப்பட்டதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், எந்தவொரு நீதிமன்றத்தின் முன்பும் தாம் குற்றமற்றவர் என்பதை உறுதிப்படுத்தும் வாய்ப்பு அவருக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

பல நீதிமன்றங்களில் எட்டு வழக்குகளில் தனது மகன் சந்தேக நபராக அல்லது குற்றஞ்சாட்டப்பட்டதாக தெரிவித்துள்ள மனுதாரர், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமது மகனின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய சிக்கல் எழுந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மனுவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர், மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## பள்ளத்தில் கார்...

திங்கட்கிழமை (20) காலை 7.20 மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் பசறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஹொப்டன் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் இரு பிள்ளைகளின் தந்தையான பரணிதரன் (வயது 39) என்பவரே உயிழந்துள்ளார்.

பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போதே இக்கோர விபத்து இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் படுகாயமடைந்த குறித்த ஆசிரியர் பசறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து இடம்பெற்ற இடத்தில் 2021 ஆம் ஆண்டு இதே நாளில் பஸ் விபத்துக்குள்ளாகி 13 பேர் உயிரிழந்திருந்தமை காரணமாக பிரதேச மக்கள் மத்தியில் ஒருவிதமான அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. பசறை பொலிஸார் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மார்ச் 30...

ஆங்கில மொழியின் சிறப்பு மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தரம் 6 முதல் 9 மற்றும் 10 முதல் 13 வரையான அனைத்து பாடசாலை பாடத்திட்டங்களையும் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு தேவையான மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் என்றும் இதற்கான முன்னோடித் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்பத்துடன் செயற்கை நுண்ணறிவு பாடத்தையும் கற்பிக்க அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் தேவையான பாட அபிவிருத்தி மற்றும் வள திட்டமிடல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

2030 ஆம் ஆண்டளவில் கல்வித்துறை தொடர்பான உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சவாலை வெற்றிகொள்ள அமைச்சு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் முதல் 8 ஆயிரம் கல்லூரி ஆசிரியர்களையும், 26 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களையும் சேர்த்து பாடசாலைகளின் மனித வளத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடுகளின் போது பிள்ளைகளை ஒழுங்காகக் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்துவது பெற்றோரின் கடமை என்றும் சுட்டிக்காட்டினார்.

# விழுங்கியது மண்சரிவு

காயமடைந்த ஐவரில் இருவர் கொஸ்லந்த வைத்தியசாலையிலும், இருவர் தியதலாவ வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அனர்த்தத்தில் எதுவித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை.

மண் மேடு சரிந்து விழுந்ததில் 40 வரையான லயன் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ச்சியான மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மண் சரிவுடன் சகதி கலந்துகொண்டு ஓடியதால், தோட்டத்தில் ஒருபகுதி, பொட்டலாக காட்சியளிக்கின்றது. வீடுகளுக்கு முன்பாகவும், ஓரங்களிலும் நிறுதி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை மண்சரிவு இழுத்துச் சென்று ஓர் ஓரத்தில் ஒதுக்கி வைத்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

சில வீடுகளில் இருந்த பொருட்களையும் வெளியில் தள்ளிக்கொண்டு நிறுத்திவிட்டது இந்த மண்சரிவு. சிறிய மலையிலிருந்து நீருடன் கலந்து வந்த சகதி, லயத்தின் ஓரத்திலுள்ள வீடுகளின் ஓரங்களை அடித்து துவசம் செய்துள்ளது. இதனால் அந்த வீட்டின் கண்ணாடி யன்னல்கள் மற்றும் கதவுகள் யாவற்றையும் உடைத்துக்கொண்டு சென்றுவிட்டன.

இவ்வனர்த்ததில், 62 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், 220 பேர் நிர்க்கதியாகியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சம்பவத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 20 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட அனைவரும் ஒரு மத்திய நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ புள்ளிவிவரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான மழை பெய்துவருகின்றது. மண்சரிவால் பாதிக்கப்பட்ட மேற்படி கபரகலை தோட்டத்தில் சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை கடுமையாக மழை பெய்துள்ளது.

இந்நிலையில், மண்சரிவு ஏற்படுவதற்கான எவ்விதமான அறிகுறிகளும் தென்படவில்லை என்றும், இந்தத் தோட்டத்துக்கு முன்னெச்சரிக்கை எவையும் விடுக்கப்பட்டிருக்கவும் இல்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட அந்தத் தோட்டத்துக்கு அரசியல்வாதிகள் சென்று, நிலைமையை ஆராய்ந்ததுடன், அவசரமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மீட்பு பணியாளர்கள் குழு வருகைதராத நிலையில், சிறுசிறு மீட்பு நடவடிக்கைகளை அந்தத் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் முன்னெடுத்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பூனாகலை இலக்கம் - 03 தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளமையால், இரண்டொரு நாள்களுக்கு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

ஆகையால், பாதிக்கப்பட்ட தங்களுக்கு உடனடியான நிவாரணங்களை வழங்கி, மண்சரிவு அபாயம் இல்லாத இடங்களில், தங்களுக்குரிய வீடுகளை கட்டித்தருவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குற்றவியல் வழக்குகளை...

மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வங்கிச் சட்டத்தின் 83இ பிரிவுக்கு முரணாக மேற்கண்ட 3 நிறுவனங்களும் அவற்றின் பணிப்பாளர்களும், விளம்பரதாரர்கள் மற்றும் நிறுவனர்களும் செயற்பட்டதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்கு...

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன தலைமையகத்தில் திங்கட்கிழமை (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கத்தின் கட்டமைப்பான மாகாண சபைகள் நாட்டில் செயற்படுகின்ற போதிலும், அவை ஜனநாயக விரோதமாக மக்கள் பிரதிநிதிகள் இன்றி காணப்படுவதாகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 9 ஆளுநர்கள் மாகாண சபைகளை ஆளுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரச அதிகாரிகள் ஊடாக உள்ளூராட்சி நிர்வாகம் கட்டுப்படுத்தப்படுவதாகவும் ஜனநாயகத்தை மதிக்கும் எவராலும் இந்த நிலைமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட பிரதேச மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை கட்டுப்படுத்தும் வகையில் இந்த நிறுவனங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் நேற்றைய தினம் முதல் நிலைமை மாறும் என்றார்.

மக்கள் பிரதிநிதிகள் மூலம் ஆட்சியமைக்க வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தொடர்ந்தும் கூறி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகள் இயங்காது என மக்கள் நினைத்தாலும், மாகாண சபைகள் தொடர்ந்து இயங்கினாலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமலேயே ஆட்சி நடத்தப்படும் என்றார்.

## நீதவான்...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

2022ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதியன்று ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்களால் மீட்கப்பட்ட 17.8 மில்லியன் ரூபாய் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட தேசபந்து தென்னகோனை பெப்ரவரி 16 அன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1) (அ) பிரிவின் விதிகளின்படி செயற்பாட்டாளர் மஹிந்த ஜயசிங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மீது கோட்டை நீதவான் திலின கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், கடந்த பெப்ரவரி 16ஆம் திகதியன்று கோட்டை நீதவான் வழங்கிய அழைப்பாணையை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பித்தது.

மேலும் இந்த ரிட் மனுவின் இறுதி விசாரணை மற்றும் தீர்மானிக்கப்படும் வரையில் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்தது.

## முல்லையில் தமிழர்...

கமக்கார அமைப்பினர், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனை திங்கட்கிழமை (20) அழைத்து அங்குள்ள நிலைமைகளைக் காண்பித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், கொக்குத்தொடுவாய் - கோட்டக்கேணியிலிருந்து, அம்பட்டன் வாய்க்கால், தீமுந்தல், பணம்போட்டகேணி, நாயடிச்ச முறிப்பு, வெள்ளைக்கல்லடி, சிவந்தாமுறிப்பு, சூரியனாறுவரையான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில் அரச திணைக்களத்தைச் சார்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டு அபகரிப்பு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கோ, கமக்கார அமைப்பினருக்கோ அறிவித்தல் வழங்கப்படாமலேயே குறித்த எல்லைக் கற்கள் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பினை ஏற்று குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்ற முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், இது தொடர்பில் உரியவர்களின் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும் தெரிவித்திருந்தார்.

## நேற்று முதல்..

ஒரு ஹெக்டேயருக்கு 55 கிலோ கிராம் உரம் விநியோகிக்க உள்ளதாகவும் குறித்த உரத் தொகையை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்தது.

ரிஎஸ்பி உரத்தை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து கமநல சேவைகள் நிலையங்களினூடாகவும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பயிர்ச்செய்கைகளை ஆரம்பிக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் இதே முறையில் உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## மண்சரிவு அபாயம்

காலி மாவட்டத்தின் நாகொட, பத்தேகம, மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல, ரத்தோட்ட, வில்கமுவ, நாவுல ஆகிய பிரதேசங்களிளுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேசங்களில் கடும் மழை பெய்து வருவதையடுத்து மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிரேஷ்ட விஞ்ஞானியான கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்தார்.

மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட கண்டி, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களின் மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மிகக் கடுமையான...

அதேவேளை, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதால் எரிபொருட்களின் விலைகள் மற்றும் மின்சார கட்டணங்கள் கணிசமான விகிதத்தில் குறைக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும், இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் மற்றும் எரிபொருள் நுகர்வு குறைக்கப்பட்டதாலும் அமெரிக்க டொலருக்கான தேவை குறைந்துள்ளதால் ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை இலங்கை செலுத்த ஆரம்பித்து, இறக்குமதி கட்டுப்பாடுகளை இரத்து செய்து இறக்குமதியை அனுமதித்தால் டொலர் மீண்டும் உயரும் என்றும் குறிப்பிட்டார்.

## வலயத்தில் இருந்ததால்...

இது தொடர்பில் அவர் அறிக்கையிட்டுள்ளதாவது, ‘மீரியபெத்தையில் மண்சரிவு ஏற்பட்ட பின்னர், பதுளை பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வில் கபரகல தோட்டமும் மண்சரிவு அபாய வலயத்தில் இருந்தது.

எனவே, அம்மக்களை பாதுகாப்பான இடங்களில் தற்காலிகமாக தங்கவைக்குமாறும், வீடுகளை அமைப்பதற்கு பாதுகாப்பான இடத்தில் காணி ஒதுக்கி தருமாறும் நாம் தோட்ட நிர்வாகத்திடம் கோரியிருந்தோம்.

எனினும், தோட்ட நிர்வாகம் காணி வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. மக்கள் தொடர்பிலும் அசமந்தமாக செயற்பட்டுள்ளது.

எனவே, அரச நிர்வாக பொறிமுறை உரிய முன்னேற்பாடுகளை கோரியும், அதனை வழங்க நடவடிக்கை எடுக்காத தோட்ட நிர்வாகம் பொறுப்புக்கூற வேண்டும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் 32%...

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங்கையின், உணவு பாதுகாப்பின்மை மட்டங்கள் குறித்து உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

82 சதவீதமான இலங்கை குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தமது தொழிலுக்கு மேலதிகமாக வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.

இலங்கையில் உள்ள 48 வீதமான குடும்பங்கள் நிதி நிறுவனம் அல்லது கடனாளிகளிடமிருந்து கடன் பெற்றுள்ளனர் அல்லது தமது குடும்பத்தின் உணவுத் தேவைக்காக குடும்பம் வைத்திருந்த தங்க ஆபரணங்களை அடகு வைத்து பணத்தை பெற்றுள்ளனர் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் சந்தை செயற்பாட்டுக் குறியீட்டின் அடிப்படையில், ஜனவரி மாதத்தில் சந்தைகளில் விலை ஏற்ற இறங்கள் குறித்து கரிசனை வெளியிடப்பட்டுள்ளது.

சந்தைகள் செயற்பாட்டில் உள்ளதுடன், தற்போது பரந்த அளவிலான தயாரிப்புகள், அத்தியாவசிய பொருட்களின் போதுமான இருப்பு மற்றும் நெகிழ்ச்சியான விநியோகச் சங்கிலி ஆகியவற்றைக் கொண்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொது உணவு விநியோகம், பாடசாலை உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவி மூலம் 3.4 மில்லியன் மக்களுக்கு உதவுவதற்கு உலக உணவுத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

## சின்னத் தேர்தலில்...

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் ஜி புஞ்சிஹேவாவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்த அரச சேவையில் உள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நியாயமான தீர்வை விரைவாக நடைமுறைப்படுத்த பொது நிர்வாக அமைச்சுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என்பதை உறுதிப்படுத்த முடியாவிட்டால் இந்த அதிகாரிகள் இதுவரை பெற்ற ஒருங்கிணைந்த சம்பளத்தில் நியாயமான சதவீதத்தை மார்ச் 9 முதல் அமலுக்கு வரும் வகையில் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகிறார்

பொரளை, குப்பியாவத்த பிரதேசத்தில் திங்கட்கிழமை (20) பிற்பகல் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும், நாட்டின் உயர்நீதிமன்றத்துக்கும், நிதி அமைச்சுக்கும் மற்றும் அரச அச்சகத்துக்கும் கூட இடையூறுகளை ஏற்படுத்தி தேர்தலை சீர்குலைக்கும் செயலிலும் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு ஆதரவு தெரிவித்து துணைபோகும் விதமாக தேர்தலை சீர்குலைக்கும் ஜனாதிபதியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாட்டு மக்கள் முறைமை மாற்றமொன்று வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தாலும், தற்போது முறைமை மாற்றம் ஒன்று நிகழாது ராஜபக்ஷர்களை பாதுகாக்கும் திட்டமொன்றே இயங்கி வருவதாக சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் எரிக்கப்பட்ட வீடுகளுக்கு நட்டஈடு வழங்குதல், மொட்டு எம்பிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் முழு பதவிக் காலம் முடியும் வரை பொதுத் தேர்தலுக்கு செல்லாதிருத்தல் என்ற காரணங்களுக்காக மாத்திரமே இந்த ஜனாதிபதி செயற்பட்டுக்கொண்டிருக்கிறார் என்றார்.

ஆரையம்பதியில்

# விசாரணைக்கு சென்ற பொலிஸார் மீது தாக்குதல்

## தாக்குதலை நடத்தியவர் கைக்குண்டுடன் கைது

கனகராசா சரவணன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் 119 அவசர பிரிவுக்கு வந்த முறைப்பாடு தொடர்பாக, குறித்த வீட்டுக்கு விசாரணைக்கு சென்ற பொலிஸார் மீது, ஒருவர் தாக்கியதில் இரு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் தாக்குதலை மேற்கொண்டவர் தப்பி ஓடிய நிலையில் ஞாயிற்றுக்கிழமை (19) இரவு கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இது தொடர்பாக தெரியவருவதாவது: ஆரையம்பதி கிழக்கு பிரதேசத்தில் இருந்து சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை காலை, பொலிஸாரின் 119 அவசரசேவை பிரிவுக்கு, தனது கணவர் தன்னை அடித்துத் துன்புறுத்துவதாக வந்த தொலைபேசி அழைப்பை அடுத்து, இரண்டு பொலிஸார் விசாரணைக்காக அந்த வீட்டுக்கு வாகனத்தில் சென்றபோது, அங்கு இருந்த வீட்டின் உரிமையாளரான மனைவியை தாக்கிய கணவன், பொலிஸார் மீதும் தாக்குதலை மேற்கொண்டார். இதையடுத்து, இரண்டு பொலிஸாரும் காயமடைந்ததையடுத்து, குறித்த நபர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இதையடுத்து, காயமடைந்த இரண்டு பொலிஸாரும் ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அங்கிருந்து ஒருவரை, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்

இந்த நிலையில், தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பி ஓடிய நபரை கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்துள்ளதாகவும் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.











சர்வதேச வாய்ச் சுகாதார தினம்:

# விழிப்புணர்வு பேரணி

ரீ.எல் ஜவ்பர்கான்



உலக வாய்ச் சுகாதார தினத்தையொட்டி, சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையும் இணைந்து மட்டக்களப்பு நகரில் நேற்று (20) பாரிய விழப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மகாத்மா காந்தி பூங்காவை வந்தடைந்த பேரணி, மட்டக்களப்பு பஸ் தரிப்பு நிலையத்தை அடைந்து, அங்கு சாரதிகளுக்கு வாய்ப் புற்றுநோய் தொடர்பாக வாய்ப் பரிசோதனை நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எம். சுகுணன், மாவட்ட பல் வைத்தியதிகாரி எஸ். முரளீதரன் உட்பட வைத்தியர்கள், தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலரும் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

# போதையில் இருந்து நாட்டை மீட்போம்

எம்.எஸ்.எம் நூர்தீன்

போதைப்பொருள், மதுப்பழக்கம் ஆகியவற்றை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், விமோச்சனா இல்லத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சைக்கிள் பவனி, 17ஆம் திகதி ஜா-எலயில் ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (19) மட்டக்களப்பு, கல்லடியில் நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து, விமோர்ச்சனா இல்ல வளாகத்தில் விமோர்ச்சனா இல்லத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்று பணிப்பாளருமான தேவதர்மினி செல்விக்கா சகாதேவன் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்து சிறப்பித்தார்.

**“ போதைப்பொருள், மதுப்பழக்கம் ஆகியவற்றை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், விமோச்சனா இல்லத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சைக்கிள் பவனி, 17ஆம் திகதி ஜா–எலயில் ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (19) மட்டக்களப்பு, கல்லடியில் நிறைவடைந்தது. இந்த சைக்கிள் பவனியில் போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனையில் இருந்து விடுதலை பெற்றவர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது**

குறித்த நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன், மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# திருகோணமலையில் ஆழ்கடல் கழிவுகள் அகற்றப்பட்டன

ஹஸ்பர்





திருகோணமலையில் முதல் தடவையாக ஆழ் கடலில் கழிவுகளை அகற்றும் திட்டம் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது. திருகோணமலை நகர கடல் பகுதியில் Trinco Aid இன் ஏற்பாட்டில் Yana Foundation (Swimming Academy) இல் பங்குபற்றிய நீச்சல், சுழியோடி மாணவர்களின் ஒத்துழைப்புடன் Lions' Club of Centennial Paradise (Trincomalee) ஆதரவுடனும் UN SDG2030 இன் 14 ஆவது இலக்கான 'Life Below Water' இற்கு அமைய இத்திட்டம் அமல் படுத்தப்பட்டது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக திருமதி தயாளினி ஹரிகரன் (Trinco Aid பணிப்பாளர்), நந்தன விஜயலால் (Yana Foundation பணிப்பாளர்), டொக்டர் கிருஷாந்தன், ஜெயசீலன் (Blue Water Sports உரிமையாளர்) ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இத்திட்டத்தை Trinco Aid நிறுவனர் இராஜகோன் ஹரிஹரன், Trinco Aid இன் நிகழ்ச்சி முகாமையாளர் சங்கரலிங்கம் நவநீதன் முன்னின்று வழிநடத்தினார்.

# வெடியரசன் கோட்டை தமிழர்களின் அடையாளம்

## ஸ்ரீதரன் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்

நிதர்சன் வினோத்

நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், தொல்புரம், பூநகரி, மன்னார் போன்ற பகுதிகளை, கி.மு 200 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சிசெய்த தமிழ் மன்னனான வெடியரசன் காலத்தில் அமைக்கப்பட்டதும், நெடுந்தீவு மண்ணின் 'கோட்டைக்காடு' என அழைக்கப்படும் நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் (J/01) இன்றும் தமிழர் தம் பண்பாட்டு, மரபியல் அடையாளமாகப் பேணப்பட்டு வருவதுமான வெடியரசன் கோட்டையை, பௌத்த தாதுகோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் முனைப்புகளை தடுத்துநிறுத்துமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

தொல்பொருள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கில் நடைபெறும் பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டி 2023.03.16 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள இக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தமிழ்த் தேசிய இனம் மீதான மொழி, நில, பண்பாட்டு, அடையாள ஆக்கிரமிப்புகள், தங்களது ஆட்சிக் காலத்தில் மேலும் வீரியமாக மேற்கொள்ளப்படுவது, தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான இன நல்லிணக்கத்தை அடியோடு சிதைக்கும் நடவடிக்கையாகவே அமையும் என்பதை தாங்களும் உணருவீர்கள் என நம்புகிறேன்.

தமிழ் மக்களது இன, மத, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் அடியோடு அழிக்கப்பட்டு அல்லது அந்த அடையாளங்களின் முக்கியத்துவமும், தொன்மமும் வலிந்து மறைக்கப்பட்டு, அத்தகைய தொல்லிடங்களில் சிங்கள பௌத்த அடையாளங்களான விகாரைகளையும், புத்தர் சிலைகளையும், துறவிமடங்களையும் அமைக்கும் நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மிக முனைப்போடு செயலுருப்பெற்றுள்ளன.

வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, நிலாவரை, நாவற்குழி, மயிலிட்டி, மண்ணித்தலை, உருத்திரபுரம், கச்சதீவு, கன்னியா வெந்நீரூற்று என நீளும் இவ் ஆக்கிரமிப்புப் பட்டியல், தற்போது நெடுந்தீவின் வெடியரசன் கோட்டை வரை கால்களை ஆழப் பதித்துள்ளது. இது, தமிழர்களின் இயல்புவாழ்வு குறித்த அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவின் மாவிலி இறங்குதுறையிலும், கோட்டைப் பகுதியிலும் புதிதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிங்களம், ஆங்கில மொழியிலான விளம்பரப் பலகைகளில் தற்போதுள்ள 'கோட்டையின் பாகங்கள் பௌத்த தாதுகோபுரத்தின் எச்சங்கள்' எனக் குறித்துரைக்கப் பட்டுள்ளதன் மூலம், மிகப்பாரதூரமான வரலாற்றுத் திரிபுக்கான முன்னகர்வுகளை தொல்பொருளியல் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை தொடர்ந்தும் தமிழர்களின் பாரம்பரிய அடையாளமாக பேணிப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போலி தங்க முத்துகளுடன் வெலிஓயாவை சேர்ந்தவர் கைது



செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவில் போலியான தங்கமுலாம் பூசப்பட்ட முத்துகளை விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் வெலிஓயா, ஜனகபுரத்தைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேக நபரை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றுள்ளது

போலி தங்கமுலாம் பூசப்பட்ட 1,400 முத்துகளை, அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக முல்லைத்தீவு நகரத்துக்கு வந்த நிலையில், குறித்த சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

அரசிடம் நிதி இல்லாததால் தனியார் நிறுவனங்களின் ஊடாகவே

# மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்

## முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன்



சுப்பிரமணியன் பாஸ்கரன்

மக்கள் பங்களிப்பு இல்லாவிட்டால், எந்த ஒரு செயல் திட்டத்தையும் பூரணமாக நிறைவேற்ற முடியாது என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தெரிவித்துள்ளார்

இலங்கை வங்கியின் மூன்றாவது கிராமமாக, முல்லைத்தீவு, சிலாவத்தை தீர்த்தக்கரை கிராமத்தை அங்குரார்ப்பனம் செய்யும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து குறிப்பிகையில், இலங்கை வங்கி, வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குவதிலும் சேமிப்பை மேற்கொள்வதிலும் அல்லது ஒரு கிராமத்தை தத்தெடுத்து கிராம மக்களின் பங்களிப்போடும் ஏனைய அமைப்புகளின் பங்களிப்போடு மிகப்பெரும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. மக்கள் பங்களிப்பு இல்லாவிட்டால், எந்த ஒரு திட்டத்தையும் பூரணமாக நிறைவேற்ற முடியாது. அதற்கு இத்திட்டம் ஒரு நல்ல உதாரணமாகும். அரச நிதி இல்லாத நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்களினுடைய அல்லது தனியார் நிறுவனங்களின் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில், இவ்வாறான அபிவிருத்திகளை மக்கள் பங்களிப்புடன் தான் முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றார்.

வடக்கு கடலை இந்திய மீனவர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதைக் கண்டித்து

# வியாழக்கிழமை மன்னாரில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



எஸ். றொசேரியன் லெம்பேட்

வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து, இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாள்களுக்கு குத்தகை வழங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்களின் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை கண்டித்து, வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து வியாழக்கிழமை (23) காலை மா பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டள்ளது.

இதுதொடர்பான ஊடக சந்திப்பு, மன்னாரில் நேற்று (20) நடைபெற்றபோது, மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம்.ஆலம் , மன்னார் மாவட்ட கிராமிய சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் சொய்சா, மீனவ சமூகம் சார்பாக அன்ரனி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது;

குறித்த ஆர்ப்பாட்டத்துக்கு வர்த்தகர்கள், சிவில் சமூக அமைப்புகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், விவசாயிகள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய மீனவர்களுக்கு வரி அறவிட்டு, மூன்று தினங்கள் இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்குவதை பரிசீலிப்பதாக 22- 2- 2023 அன்று பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், மன்னார் மாவட்டம் மற்றும் வட மாகாணம் தழுவிய மீனவர்களும் மீனவ சமாசங்களும் தங்களுடைய கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

**“ வடக்கு கடல் பகுதியில் இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாள்களுக்கு குத்தகை வழங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்களின் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை கண்டித்து, வடக்கு மாகாண மீனவர்களின் ஒன்றிணைந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு வர்த்தகர்கள், சிவில் சமூக அமைப்புகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், விவசாயிகள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு**

இந்த விடயத்தை, அரசாங்கம் பரிசீலனை கூடச் செய்யாமல், உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியும், இலங்கை - இந்திய மீனவர்களின் பேச்சுவார்த்தை, 2016 இல் எடுத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம், மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மருத்துவ மனையின் பிரதான பாதையூடாக சென்று மன்னார் புதிய பஸ் நிலையத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெற வுள்ளது.

இதற்கு அமைவாக, வடபகுதியில் இருக்கும் பொது அமைப்புகள், மீனவ சங்கங்கள், ஏனைய சிவில் சமூகங்கள் அனைத்தும் எம்மோடு இணைந்து, இந்த விடயத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் எனவும் என தெரிவித்தனர்.

# கபரகலயில் பாரிய மண்சரிவு

## வசதிகளை செய்யவும்



பண்டாரவளை, பூனாகலை - கபரகல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உடன் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும், அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன், மண்சரிவு சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து, தமக்கு விரிவானதோர் அறிக்கையை முன்வைக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளிடம் நேற்று (20) அமைச்சர் வலியுறுத்தினார்.

இவ்வனர்த்தம் தொடர்பில் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரஸ்தாபித்தார். அதன்மூலம் மக்களுக்குத் தேவையான அடுத்தக்கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மண்சரிவு ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்த கையோடு, தனது அமைச்சின் செயலாளரை தொடர்புகொண்ட ஜீவன் தொண்டமான், உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு ஆலோனை வழங்கினார். அதன்பின்னர் பிரதேச செயலாளர், பாதுகாப்புத் தரப்பினர், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், ட்ரஸ்ட் நிறுவன பிரதானிகள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய அமைச்சர், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு பணிப்பு விடுத்தார்.



## செந்தில் இன்று களவிஜயம்



பண்டாரவளை பூனாகலை - கபரகலை பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிக்கு இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் இன்று (21) நேரடி விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தோட்ட நிர்வாகம் மாற்று இடங்களையும், பாதுகாப்பு வசதிகளையும் செய்துகொடுக்காவிடின் மக்களுடன் கலந்துரையாடி பலவந்தமான தீர்மானங்களை நிர்வாகத்துக்கு எதிராக எடுக்க வேண்டிய நிலை உருவாகுமென செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கணிசமான தொகை நட்டஈடாகபட பெற்றுத்தரப்படும் எனத் தெரிவித்தார்.

## குற்றமாகவே காண்கின்றேன்

பூனாகலை, கபரகலை தோட்டத்தில் மண்சரிவுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு பொறுப்பு கூற வேண்டும் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்பின் - ஆசியா பசிபிக் (ITUC-AP )பிராந்திய மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வடிவேல் சுரேஷ் எம்.பி பங்கேற்றுள்ளார்.

இம்மாநாட்டில் பெருந்தோட்ட மலையக மக்களின் எதிர்கால நலன்புரி வேலைத் திட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், மண்சரிவு தொடர்பில் அங்கிருந்து கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீரற்ற வானிலை மாற்றத்தால் பெருமளவு பாதிப்புக்கு



உள்ளாகுவது பெருந்தோட்ட மலையக பகுதிகளேயாகும். இதனை நன்கு அறிந்தும், மண்சரிவு தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் ஏன் முன்னறிவித்தல் விடுக்கப்படவில்லை? இதனை பாரியதொரு குற்றமாகவே காண்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

உடனடியாக மீண்டும் அப்பிரதேசத்தை மீள் பரிசோதனை செய்து, அருகில் உள்ள பிரதேசங்கள் தொடர்பிலும் ஆராய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை மேற்கொள்வதோடு அம்மக்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியமர்த்தக்கூடிய நடவடிக்கைகளையும் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என ஜனாதிபதிக்கு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளேன் என்றார்.

## அவசர நடவடிக்கைக்கு அரவிந்தகுமார் பணித்தார்

கடும் மழை காரணமாக பண்டாரவளை, பூனாகலை தோட்டம் கபரகலை பிரிவில் மண்சரிவு ஏற்பட்ட இடத்துக்கு விஜயம் செய்த கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், கள நிலைமைகளை அவதானித்ததோடு, சம்பந்தப்பட்ட அனைத்து அரச அதிகாரிகளோடும் விரிவாக கலந்துரையாடியதுடன், அவசரமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து பணிப்புரை விடுத்தார்.




## தொதலில் இறந்த எலி

■ செ.தி.பெருமாள்

சிவனொளி பாதமலைக்கு தரிசனம் செய்ய வந்த பக்தர் ஒருவர், தரிசனம் முடித்து விட்டுத் திரும்பிச் செல்லும் வேளையில், நல்லதண்ணி நகரிலுள்ள இனிப்புப் பண்டங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றில் தொதல் பொதியொன்றை, நேற்று முன்தினம் வாங்கியுள்ளார்.

அந்தப் பொதியை உண்ணுவதற்கு நேற்று எடுத்து வெட்டிய போது, அந்தத் தொதல் பொதியில் இறந்த நிலையில் எலி இருப்பதை அவதானித்துள்ளார்.

இலட்ச கணக்கான மக்கள் கூடும் சிவனொளி பாதமலை பருவ காலங்களில், இவ்வாறு தரமற்ற உணவுப் பொருட்களை



விற்பனை செய்வதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி, இனிப்புப் பண்டங்கள் விற்பனை நிலையம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட நபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கிராம சேவையாளருக்கு அதிர்ச்சி கொடுத்த திருடன்

■ சுமணசிறி குணதிலக்க

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர் ஒருவரை, நேற்று முன்தினம் (19) பார்வையிட வந்த கிராம சேவகர் ஒருவரின் சுமார் இரண்டு இலட்சத்து 90,000 ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

மொனராகலை வைத்தியசாலைக்கு முன்பாக தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவைத்துவிட்டு, நோயாளியை பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குள் சென்றுள்ளார். இதன்போதே, இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து அதிர்ச்சியடைந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளரான அதமலே, கொட்டியாகலை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நபர், மொனராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

மொனராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை மட்டத்தில் முதலிடம்

■ எம். செல்வராஜா

வத்தளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்ற பரிதிமால் மிதுஷன் 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் ஐந்து புலமை



பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளை பெற்று, பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் ஆசிரியர்களாக பரிதிமால், புஸ்பலதா தம்பதியினரின் புதல்வனாவார்.









## இரத்தினதீப வைபவம்

மலையக கலை, கலாசார சங்கம் (இரத்தின தீபம் அமைப்பு) ஒழுங்கு செய்த மறைந்த திரைப்பட நடிகர் காமினி பொன்சேக்கா, சினிமா கலைஞர் லெனின் மொராயஸ் மற்றும் ஊடகவியலாளர் எம். எஸ்.குவால்தீன் ஆகியோரின் நினைவு தின வைபவம், கண்டி வீரகெப்பட்டிப்பொல மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் அதிதிகளாக பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி துரை மனோகரன், சட்டத்தரணி, கலாநிதி ஏ.எம் வைஸ், பிரபல சினிமா நடிகர் ரிசார்ட் வீரக்கொடி உட்பட பலர் கலந்துகொண்டனர். அதிதிகள் கௌரவிக்கப்படுவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மொஹமட் ஆஸிக்)

### ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின்

## ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

■ எஸ்.சதீஸ்

ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின் முதலாவது ஆண்டு நிறைவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும், ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின் தலைவி திருமதி அகிலா கையிலை நாதன் தலைமையில், டிக்கோயா அபுசாலி மண்டபத்தில், நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

இதன்போது கடந்தாண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் பணப்பசுகளும் வழங்கப்பட்டன. அத்தோடு, ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின் ஊடாக தையல் வகுப்புகளை நிறைவு செய்த ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ - பெற்றோசோ, செல்வகந்த பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும்





வழங்கப்பட்டன. மேலும், ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின் தலைவி திருமதி அகிலா கையிலை நாதன், பணிப்பாளர்களும் இணைப்பாளர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மதகுருக்கள், சிரேஷ்ட சட்டத்தரணி திருச்செல்வம், கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் அகிலன், ஹட்டன் மக்கள் பிரிவின் சூழல் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி சுந்தரராஜன், ஆசிரியர் ஆலோசகர்கள், அதிபர்கள், ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின் பணிப்பாளர்களான ரமேஸ்குமார், கலாராணி, ஆலோசகர் தமேயந்தி, திட்ட இணைப்பாளர்களான கணேசன், இளையராஜா, திருச்செல்வம் விஜயகாந், சிவகுமார், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

### தேயிலை தொழிற்சாலை தீ;

## விசாரணை ஆரம்பம்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா - கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எஸ்கடேல் தோட்ட (சந்திரகாந்தி), தேயிலை தொழிற்சாலை தீ பிடித்தமை குறித்த புலனாய்வு விசாரணை கந்தப்பளை பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கந்தப்பளை பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி எஸ். முத்துகுமார் தலைமையிலான பொலிஸ் குழு சம்பவம் தொடர்பான விசாரணையை ஆரம்பித்துள்ளது.

தொழிற்சாலை திடீர் தீப்பிடிப்புக்கு உள்ளான காரணத்தைக் கண்டறிய கொழும்பிலிருந்து தடயவியல் இரசாயன பகுப்பாய்வு பொலிஸார் நேற்று முன்தினம் (19) வரவழைக்கப்பட்டு, பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன.

அத்துடன், அதிகாரிகளால் மாதிரிகள் பல பெறப்பட்டு, அரசாங்க பகுப்பாய்வு பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டன.

கடந்த 18ஆம் திகதி அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கோர தீ விபத்துச் சம்பவம் தொடர்பாக தொழிற்சாலை காவலாளிகள், சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் தொழிற்சாலையில் கழிவு தேயிலை தூள் பொதி செய்யும் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று இளைஞர்களிடமும் விசாரணைகள் மேற்கொண்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்தத் தீ சம்பவத்தில் இரும்பாலும், தகரத்தாலும் அமைக்கப்பட்டிருந்த மூன்று மாடிகளைக் கொண்ட பழைமையான தேயிலைத் தொழிற்சாலையின் இரண்டாம் மாடியின் ஒரு பகுதியில் பற்றிய தீ பரவிய நிலையில், தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ பிடிப்புக்கு மின்சார ஒழுக்கு காரணமா அல்லது வேறேனும் கோளாறா என்பது தொடர்பில் தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையிலேயே, சம்பவத்துக்கான காரணத்தை கண்டறிய இரசாயன தடயவியல் பகுப்பாய்வு பிரிவினர் தொழிற்சாலையை ஆய்வுக்கு உட்படுத்தினர்.





# Francophonie 2023 நிகழ்ச்சி

இலங்கை மற்றும் மாலைதீவுகளிற்கான சுவிட்சர்லாந்து தூதரகம் மற்றும் சர்வதேச அமைப்பான *la Francophonie* இன் அனுசரணையுடன், சுவிஸ் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் பாடல்கள் ஒன்றிணைந்த இசை நிகழ்வு, இலங்கையின் மூன்று பிரதான நகரங்களில் நடத்தப்படவுள்ளது. இந் நிகழ்வை *Francophonie 2023* இனை கொண்டாடும் வகையில் புகழ்பெற்ற *Les Monsieur Monsieur* குழுவின் *Laurent BRUNETTI* மற்றும் *Mario PACCHIOLI* இருவரும் இணைந்து நடத்தவுள்ளனர்.

அறிமுக நிகழ்வு இலங்கை மன்றக் கல்வியகத்தின் (SLFI) 'Garden Nuga' பகுதியில் மார்ச் மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.7.00 மணி முதல் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இரண்டாம் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் மார்ச் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.7.00 மணி முதல் இடம்பெறும். இறுதி நிகழ்வு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப.6.00 மணிக்கு இடம்பெறும். இந் நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் பார்வையார்களுக்கு அனுமதி இலவசம்.

> **Francophonie 2023 இனை கொண்டாடும் வகையில் புகழ்பெற்ற Les Monsieur Monsieur குழுவின் Laurent BRUNETTI மற்றும் Mario PACCHIOLI இருவரும் இணைந்து நடத்தவுள்ளனர்**

இவ் இசைப்பயணத்தில் மேற்குறிப்பிட்ட பாடகர்களின் சொந்த இசையமைப்பில் உருவான பாடல்கள் மற்றும் பிரான்ஸ், சுவிஸ் நாட்டு இசையமைப்பாளர்களின் சிறந்த இசையமைப்பில் வெளிவந்த பாடல்கள் இசைக்கப்படவுள்ளது. இப்பாடல்கள் பாடகர்களின் உணர்வுபூர்வமான ஆற்றுகை மற்றும் தனித்துவமான இயலிசை விளக்கங்களுடன், மொழித் தடைகளை கடந்து பார்வையாளர்களை மெய்மறந்து ரசிக்க வைக்கும். இவ்விரு இசைக் கலைஞர்களும் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு இசைப்பயிற்சி வகுப்பை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

> **பயணத்தை ஒரு பியானோ வாசிப்பவராகவும் ஒபெரா பாடகராகவும் 7 வயதில் ஆரம்பித்திருந்தார்**

*Laurent BRUNETTI* அவரின் இளம் வயது முதல் இயல் இசை துறையை தமது தொழில் வாழ்க்கையாக உருவாக்கினர். பியானோ அல்லது இணைந்த இசைக்குழுவுடன் சேர்ந்து *BRUNETTI*, பாடல் வரிகளுக்கு இசையமைத்தார் அத்துடன் இயலிசை ஆற்றுகைக்கான மெல்லிசை மெட்டுகளையும் வழங்குகின்றார். இதுவரை ஐந்து இசை தொகுப்புகளை வெளியிட்டுள்ள இவர், ஏனைய இசைக் கலைஞர்களுக்கு பாடல் வரிகளை எழுதியுள்ளார்.

*Mario PACCHIOLI* தமது இசை வாழ்க்கைப் பயணத்தை ஒரு பியானோ வாசிப்பவராகவும் ஒபெரா பாடகராகவும் 7 வயதில் ஆரம்பித்திருந்தார். சுவிட்சர்லாந்தில் சாதனை படைத்துள்ளதுடன் நான்கு இசை தொகுப்புகளை வெளியிட்டுள்ள இவர் *Los Angeles* நகரின் *Musicians Institute of Technology of Hollywod* தமது கலைத்திறமையை மேம்படுத்தியிருந்தார். பிரான்ஸில் திரை நடிகராகவும் பயிற்சி பெற்றுள்ளார். இவரின் அண்மைய இசை தயாரிப்பான *"Remas"* ஐ தமது தாய் மொழி *Romansh* க்கு சமர்ப்பணம் செய்திருந்தார். இணைந்த இசைக்குழு, தனித்துவமான குரல் மற்றும் பாடகர் குழு ஆகியவற்றுக்காக *PACCHIOLI* புகழ்பெற்றுள்ளார்.

# லெபனானாக மாறுகிறதா இலங்கை






ச.சேகர்
{திங்கட்கிழமை (20) தொடர்ச்சி}

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் திகதி லெபனானின் பிரதான பெய்ரூட் துறைமுகத்தில் பாரிய வெடிப்பு ஏற்பட்டு, முழு உலகின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. 200க்கும் அதிகமானவர்கள் இதனால் உயிரிழந்ததுடன், ஆயிரக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். இந்த வெடிப்பின் காரணமாக பல கிலோமீற்றர்கள் சுற்றுவட்டாரப் பகுதி கடும் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வெடிப்புக்கு காரணம், 2,750 டென்கள் அமோனியம் நைட்ரேட் இரசாயனம், பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்ததுடன், எதிர்பாராத விதமாக தீப்பற்றியிருந்தமை என கண்டறியப்பட்டிருந்தது. இந்த வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து மீண்டும் மக்கள் போராட்டங்கள் ஆரம்பமாகியிருந்ததுடன், அக்காலப் பகுதியில் நாட்டின் பிரதமராக இருந்த ஹசன் தியாப்பை பதவி விலகுமாறு வலியுறுத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பிரதமர் ஹசன் தியாப் மற்றும் அமைச்சரவை பதவி விலகியது. ஆனாலும், இடைக்கால அரசாங்கமாக பதவியைத் தொடர்ந்திருந்தனர். இதனால் 2021 ஆம் ஆண்டு வரையிலும் போராட்டங்கள் தொடர்ந்திருந்தன. வறுமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக லெபனான் மக்கள் வீதிகளை மறித்து, டயர்களை எரித்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

2021 மார்ச் மாதத்தில், அந்நாட்டின் வலுத்துறை அமைச்சர் ரேமன்ட் கஜார், மின்பிறப்பாக்கல் நிலையங்களை செயற்படுத்த அவசியமான எரிபொருள் கொள்வனவுக்கு அவசியமான நிதியைத் திரட்டிக் கொள்ள முடியாமல் போனால், லெபனான் அம்மாத இறுதிக்குள் இருளில் மூழ்கும் அபாயம் நிலவுவதாக குறிப்பிட்டிருந்தார். 2021 ஆகஸ்ட் மாதம், வட லெபனானில் பாரிய எரிபொருள் வெடிப்பு நேர்ந்ததுடன், அதில் 28 பேர் உயிரிழந்தனர். செப்டெம்பர் மாதம் புதிய பிரதமர் நாஜிப் மிகாடியின் தலைமையில் அமைச்சரவை பதவியேற்றதுடன், ஒக்டோபர் 9 ஆம் திகதி, போதியளவு நாணயம் மற்றும் எரிபொருள் இன்மையால், லெபனான் 24 மணி நேரமும் மின்சாரமின்றி இருக்க வேண்டிய நிலைக்கு முகங்கொடுத்தது. இதனைத் தொடர்ந்து மக்கள் கிளர்ச்சி தொடர்ந்தும் இடம்பெறுவதுடன், 2022 ஜனவரி மாதம் லெபனானில் நிலை மேலும் மோசடைந்திருந்தது. லெபனான் நாணயத்தின் பெறுமதி மோசமான வீழ்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், பொதுத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. அந்நாட்டின் நாடாளுமன்ற தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டமையானது, நாட்டின் அரசியல் நெருக்கடி மேலும் மோசமடைவதற்கு காரணியாக அமைந்திருந்தது. இதனை ஐரோப்பிய நாடாளுமன்றம், "அரசியல் வகுப்பைச் சேர்ந்த சில நபர்களால் தோற்றுவிக்கப்பட்ட அனர்த்த நிலை" என குறிப்பிட்டிருந்தது.

2022 மே மாதம் லெபனானில், தேர்தல் இடம்பெற்றது. இக்கால கட்டத்தில் லெபனானின் மொத்த சனத்தொகையில் 80 சதவீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிப்பதாக ஐக்கிய நாடுகள் வகைப்படுத்தியிருந்தது. இந்தத் தேர்தலில், சவுதி அரேபியாவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்ட கிறிஸ்தவ கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றதுடன், ஈரானின் பின்புலத்தைக் கொண்ட சியா முஸ்லிம்களின் ஹெஸ்புல்லா இயக்கம் அதன் பெரும்பாண்மையை இழந்திருந்தது.

ஒரு காலத்தில் உலகின் மிகச்சிறந்த இரவு வேளை விருந்தோம்பல் மேற்கொள்வதற்கு மிகச்சிறந்த நாடாக லெபனானின் பெய்ரூட் திகழ்ந்தது. நாட்டின் பொருளாதார, அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து, அந்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் விஜயம் பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

அரசியல், பொருளாதார நெருக்கடி காரணமாக அந்நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2023 பெப்ரவரி 1 ஆம் திகதி லெபனான் மத்திய வங்கியினால், லெபனான் பவுணினின் பெறுமதி சுமார் 90 சதவீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, நாட்டின் பெருமளவான மக்களை வறுமையில் தள்ளிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வரலாற்றில் பதிவாகியிருந்த மிகவும் மோசமான நாணய மதிப்பிறக்கம் கடந்த வாரம் பதிவாகியிருந்தது.

பெப்ரவரி மாத முதல் பகுதியில் மத்திய வங்கியின் தீர்மானத்தின் பிரகாரம், உத்தியோகபூர்வமாக அமெரிக்க டொலருக்கு நிகராக 15000 பவுண்கள் என நாணயப் பரிமாற்றம் காணப்பட்ட நிலையில், கடந்த செவ்வாய்க் கிழமை நாணயமாற்று வீதங்களின் பிரகாரம், அமெரிக்க டொலருக்கு நிகரான பெறுமதி 100,000 பவுண்கள் எனும் நிலையை எய்தியிருந்ததாக சர்வதேச செய்திகள் குறிப்பிடுகின்றன. இந்தப் பெறுமதி 2019 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் முன்னர் 1509 பவுண்களாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2019 முதல் 2023 எனும் நான்காண்டு காலப்பகுதியினுள் அமெரிக்க டொலருக்கு நிகரான லெபனான் பவுணின் பெறுமதி சுமார் 100 மடங்கு வீழ்ச்சி கண்டுள்ளமையினூடாக அந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் அமெரிக்க டொலருக்கு நிகரான லெபனான் பவுணின் பெறுமதி 60,000 ஆக காணப்பட்டது. அந்நாட்டில் இவ்வாறானதொரு மோசமான பொருளாதார நிலவுவதற்கு, அந்நாட்டின் அரசியல் தலைமைகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இடம்பெற்ற தேர்தலின் பெறுபேறுகளின் அடிப்படையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பாண்மை ஆட்சி அதிகாரம் கிடைத்திராத நிலையில், ஜனாதிபதியும் இல்லாத நிலையில், இடைக்கால அரசாங்கம் அந்நாட்டின் நிர்வாகத்துக்கு பொறுப்பாக உள்ளது.

இந்நிலையில், அந்நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், லெபனான் வங்கிகள் நீண்ட காலமாக வாடிக்கையாளர்களின் பண மீளப் பெறுகைகள் மீது கடும் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன.

கடந்த வாரம் முதல் வைப்பாளர்களுக்கு தமது வாழ்நாள் சேமிப்புகளை மீளப் பெறுவதற்கு தடைவிதித்துள்ளன. வங்கிகள் மூடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. வங்கிகளின் இந்த செயற்பாட்டு எதிராக வைப்பாளர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிலையில், இந்த நடவடிக்கையை வங்கிகள் மேற்கொண்டுள்ளன. வாடிக்கையாளர்களின் வழக்குகளுக்கு தீர்ப்பளித்திருந்த சில நீதிபதிகள், குறிப்பிட்ட வங்கிகளின் பணிப்பாளர்கள் அல்லது பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பணத்தை கையகப்படுத்துமாறு உத்தரவிட்டிருந்ததுடன், வாடிக்கையாளர்களின் டொலர் வைப்புகளுக்கு 1507 பவுண்கள் எனும் பழைய நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் பணத்தை வழங்குமாறும் உத்தரவிட்டிருந்தனர்.

கடந்த மூன்றாண்டு காலமாக இவ்வாறான நிலை நிலவி வருவதுடன், பெய்ரூட்டின் பல பகுதிகளில் காணப்படும் வங்கிகளை இனங்காண முடியாத நிலையில், இரும்பு கேடயங்கள் கொண்டு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், *ATM* இயந்திரங்கள் அகற்றப்பட்டுள்ளன. வங்கிக் கிளைகளும் தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாத நடுப்பகுதியில், அமெரிக்க டொலருக்கு நிகரான பவுணின் விலை 80000 ஆக குறைந்திருந்ததையடுத்து, ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள் சில வங்கிகளை தாக்கியிருந்தனர்.

லெபனான் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் நடவடிக்கை இன்மை மற்றும் பொறுப்புக்கூரல் இன்மை போன்றன பிரதான காரணிகளாக அமைந்துள்ளன. சர்வதேச கடன் வழங்கும் அமைப்புகளால் பரிந்துரைக்கப்பட்ட அவசர கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புகளில் கவனம் செலுத்த லெபனான் அதிகாரிகள் தவறியுள்ளனர். லெபனானுக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை நான்கு ஆண்டுகளில் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் கடந்த ஆண்டில் முன்வந்திருந்தது.

இலங்கையின் எதிர்கால அரசியல், பொருளாதார பயணத்தில் ஏன் லெபனானை முன்னுதாரணமாக கொள்ளக்கூடாது என்பதை நாளை இறுதிப் பகுதியில் பார்ப்போம்.

அரசியல் நெருக்கடி, ஒழுங்கான அரசியல் தலைமைத்துவம் இன்மை போன்ற காரணிகளால், இலங்கைக்கு நிகரான வளங்களைக் கொண்ட லெபனான் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றமை தொடர்பில் நாம் தொடர்ச்சியாக பார்த்தோம்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு கடந்த காலங்களில் அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் காரணமாக அமைந்திருந்தன. குறிப்பாக மொட்டுக் கட்சி 2019/2020 ஆம் ஆண்டில் ஆட்சி பீடமேறியதைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்த பொருளாதாரக் கொள்கைகள், வரிக் குறைப்புகள், அரச பணிகளுக்கான ஆட் சேர்ப்புகள், உரப் பயன்பாடு போன்ற பல விடயங்கள் மக்களை இன்றை நெருக்கடியான நிலைக்கு தள்ளுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.

இலங்கையிலும் லெபனானைப் போன்று அரசியல் வகுப்பைச் சேர்ந்த சில நபர்களால் தோற்றுவிக்கப்பட்ட அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல, தற்போது ஆட்சியிலுள்ளது மக்கள் ஆணையைக் கொண்ட ஒரு கட்சியோ அல்லது தலைவரோ அல்ல.

இவ்வாறான ஒரு சூழலில், உள்ளூராட்சி சபைகளுக்காக தேர்தலை முன்னெடுப்பதற்கு பணத்தை செலவிடாமல், நாட்டின் உறுதியான அரசியல் கட்சியை தோற்றுவிப்பதற்கு பாராளுமன்றத் தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலை முன்னெடுத்து, அதனூடாக மக்கள் ஆணையின் அடிப்படையில் தெரிவாகும் தலைவரால், இந்நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுமாயின், லெபனானில் நிலவுவதைப் போன்றதொரு சூழ்நிலை இலங்கையிலும் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

லெபனானைப் போலன்றி, இலங்கையைப் பொறுத்தமட்டில், எம்மை அண்மித்து காணப்படும் நாடு இந்தியா. இந்தியாவின் பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதியாக அமைந்துள்ளதுடன், கடந்த வருடத்தில் நாம் எதிர்நோக்கியிருந்த பல நெருக்கடிகளிலிருந்து மீட்டெடுக்க எமக்கு கைகொடுத்திருந்ததை மறந்துவிட முடியாது.

இலங்கைக்கு கைகொடுக்கும் வகையில் தற்போது சர்வதேச நாணய நிதியமும் உதவிகளை வழங்க முன்வந்துள்ள நிலையில், மக்களிடமிருந்து பணத்தை பல்வேறு வழிகளில் உருவிக் கொள்வதில் மாத்திரம் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தாது, செலுத்தும் வரிப் பணத்துக்கு உகந்த சேவையை மக்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

லெபனான் மக்களைப் போலன்றி, இலங்கை வாழ் மக்கள் இயலாத ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே கடந்த ஆண்டில் அரகலய எனும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வரி விதிப்புகள், கட்டண அதிகரிப்புகள் போன்ற பலவற்றையும் கண்டு பெரும்பாலானோர் அமைதியாக உள்ளனர்.

இந்த அமைதியை அரசாங்கம் தமக்கு சாதகமாக பயன்படுத்தி, நாட்டை இந்த பொருளாதார நெருக்கடிக்கு தள்ள காரணமாக அமைந்தவர்கள் மீது சட்ட ரீதியான எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அரவணைத்து நடமாட அனுமதித்துள்ளமையும் மக்கள் அவதானிக்காமல் இல்லை.

இனியும் அரசியல் கட்சிகளின் வழமை போன்ற வாக்குறுதிகளுக்கும், தேர்தல் கால அன்பளிப்புகளுக்கும் மக்கள் விலைபோவார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். எதற்கும் ஒரு தேர்தல் நடக்க வேண்டாமா.

லெபனான் செல்லும் வழியில் இலங்கையும் செல்லாமல், மீட்சியை நோக்கி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வழிநடத்திச் செல்லுமா? இன்னும் சில மாதங்களில் அதற்கான சமிக்ஞை கிடைக்கும்.



# வாக்காளர்களின் மனங்களை முந்திப்பிந்தி சுரண்டிப்பார்க்கும் தேர்தல்கள்

இம்முறை எப்படியாவது மாற்றமொன்றை ஏற்படுத்தவேண்டுமென வீட்டுக்கு வீடு சென்று பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில், குறித்து ஒதுக்கப்பட்ட நாளில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுமா என்பது, பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கிடையே அதிரடி அறிவிப்பொன்றை விடுத்துள்ள சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிரிச ஜயக்கொடி, ஜனாதிபதி தேர்தலே முன்னதாக நடக்குமென கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், பரந்தளவிலான கூட்டணியை அமைத்து, பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்குவதற்கு பேச்சுகள் இடம்பெறுவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்துள்ள நிலையில்தான், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தனிநபரொருவர் அறிவிப்பை விடுத்துள்ளார்.

நாடு, தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார சிக்கல், அதிலிருந்து மீண்டெழுவதற்கு அரசாங்கம் கையாளும் நடைமுறைகள், மின்சாரக் கட்டணங்கள் உள்ளிட்ட மிக முக்கிய சேவைகளின் கட்டண அதிகரிப்பு, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் தலையைத் தூக்கமுடியாமல் மக்கள் தடுமாறும் நிலைமையில், தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள் என சாதாரண பொதுமக்களிடம் கேட்டால், பதிலளிக்காது "தேர்தல் தேவையா" எனத்தான் திருப்பிக் கேட்பார்.

ஆனாலும், அரசியல்சார்ந்த பொதுமக்களிடம் கேட்டால், "தேர்தலொன்று நடத்தப்பட்டு, மாற்றமொன்றை ஏற்படுத்தவே வேண்டும்" என கூறுவார். அந்தளவுக்கு ஆட்சியின் மீது நம்பிக்கை இழந்தவர்களாய் அவர்கள் இருப்பர். நீளம், பச்சை, சிவப்பு, மஞ்சள் உள்ளிட்ட வர்ணங்களைச் சேர்ந்த கட்சிகள் தேவையில்லை. மக்கள் மீது கரிசனையைக் காண்பிக்கக்கூடிய அரசியல் தலைவர்களே தேவையென்பர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அண்மையில் எழுதியிருந்த மகாநாயக்க தேரர்கள், மக்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் சுமையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு வலியுறுத்தியிருந்தனர். இல்லையேல் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை தவிர்க்கவே முடியாது என்றும் எச்சரித்திருந்தனர்.

எனினும், சர்வதேச நிதியத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பொதுமகனும் தோளில் சுமந்தே ஆகவேண்டும். இல்லையேல் நாட்டை முன்னோக்கி நகர்த்திச் செல்வது கடினமானது. அந்த நிபந்தனைகள் யாவும் சகலருக்கும் பொதுவானதாய் இருந்தாலும், அரசியல் செல்வாக்கு படைத்தவர்கள், சிறப்புரிமையின் கீழ், பல்வேறான சலுகைகளை மிதமிஞ்சி அனுபவித்து வருகின்றனர். அவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து முன்னுதாரணமாக இருக்கவேண்டும்.

நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும். எனினும், தங்களுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலில், 'நிவாரணம்' என்பதை மட்டுமே கோடிட்டு வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. அதேபோல, எதற்கும் கையேந்தும் பிரஜைகளாக மக்களும் இருந்துவிடக்கூடாது.

தேர்தல்கள் நெருக்கினால், நிவாரணங்கள், வரிக்குறைப்பு, விலை குறைப்பு உள்ளிட்டவற்றுக்கு பஞ்சமே இருக்காது. வாக்காளர்களின் மனங்களை முந்தியும் பிந்தியும் சுரண்டிப்பார்க்கும் தேர்தல்கள் வரும் வரைதான், அவையெல்லாம் என்பதை புரிந்துகொண்டு செயற்படுவது வாக்காளர்களின் கைகளிலேயே உள்ளன.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




### ஆட்சிக்காலம் முடிவுற்ற உள்ளூராட்சி சபைகள்

# மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்ற இழுபறிகளுக்கு மத்தியில், அச்சபைகளின் ஆயுட்காலம் ஞாயிற்றுக்கிழமை (19) நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் தற்காலிகமாக மீண்டும் நீட்டிக்கப்படாவிட்டால், அவற்றை நிர்வகிக்கும் அதிகாரம் அச்சபைகளின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்குக் கிடைக்கும். தேர்தல் நடைபெற்று, புதிய சபை உறுப்பினர்கள் அதிகாரத்துக்கு வரும்வரை இது நடைமுறையில் இருக்கும்.

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலம் காலாவதியாகியுள்ள போதிலும், உள்ளூராட்சி சபைகள், உறுப்பினர்கள் செய்த சேவைகள் பற்றிய கேள்விகள், முன்னேற்ற நிலைமை பற்றிய கேள்விகள் இன்னும் காலாவதியாகவில்லை.

இதற்கு முன்னர் கடைசியாக 2018 பெப்ரவரியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெற்றது. இச்சபைகளின் நான்கு வருட ஆட்சிக்காலம், 2022இல் முடிவடைந்திருந்த நிலையில், ஒரு வருடத்துக்கு காலநீட்டிப்புச் செய்யப்பட்டிருந்தது.

இதற்கமையவே, 340 சபைகளின் ஆட்சிக்காலம் மார்ச் 19 நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளது. ஒக்டோபர் மாதம் முடிவடையும் எல்பிட்டிய பிரதேச சபை மட்டுமே, இப்போது அதிகாரத்தில் இருக்கின்றது. இதற்கமைய, 29 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகளுக்கு தேர்தல் நடத்த வேண்டிய தேவையுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உண்மையில் அரசாங்கத்துக்கு உள்ளார்ந்த முனைப்பும் இல்லை; அரச கஜானாவில் அதற்கான நிதியும் இல்லை.

இந்தப் பின்னணியில், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திகதியில் தேர்தல் நடைபெறவில்லை. ஏப்ரல் 25ஆம் திகதியும் வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கான நிகழ்தகவுகள் குறைவாகவே தெரிகின்றன.

தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர். என்ன காரணத்துக்காகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் நினைக்கின்றதோ அதே காரணத்துக்காகவே அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் போக்குக் காட்டுகின்றது எனலாம்.

உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதன் மூலம் மக்களின் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பது நூறு சதவீதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும். இதில் மறுபேச்சுக்கே இடமில்லை.

ஆனால், இப்போது தேர்தலை நடத்த வேண்டுமென குரல் எழுப்புகின்ற அரசியல் தரப்புகள் மற்றும் அதற்கு முட்டுக்கட்டை போடுகின்ற தரப்புகளில் 99 சதவீதமானோரின் உள்நோக்கம், 'ஜனநாயகத்தை காப்பாற்றுவது' அல்ல என்பது நாடறிந்த இரகசியமாகும்.

மாறாக, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது. அதற்காகவே ஜனநாயகத்தை கையில் எடுத்துள்ளார்கள். சஜித் பிரேமதாஸ ஆட்சியிலும் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியிலும் இருந்தாலும், இதுதான் நடந்திருக்கும்.

இவ்விடத்தில் ஒரு முக்கியமான கேள்வி எழுகின்றது. அதாவது, வாக்கெடுப்பை நடத்தி, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியை நிறுவினால் மட்டும், ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு விடுமா? கடந்த காலத்தில் சபைகளில் நடந்த மக்கள் விரோத, ஜனநாயக விரோத செயல்களை கணக்கிலெடுக்க வேண்டியதில்லையா என்ற வினாக்களுக்கு விடை தேட வேண்டியிருக்கின்றது.

அந்தவகையில், தற்போது ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்துள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் சாதித்தவைகள் எவை, சாதிக்கத் தவறியவை எவை? அதன் உறுப்பினர்கள் மக்களுக்கு எந்தளவு சேவையாற்றி உள்ளார்கள்? அதில் எத்தனை பேர் சித்தியடைந்து உள்ளார்கள் போன்ற மீளாய்வு அவசியமாகின்றது.

எத்தனையோ உள்ளூராட்சி சபை ஆட்சிகளை, நாம் கடந்து வந்து விட்டோம். இப்போது இன்னுமோர் உள்ளூராட்சித் தேர்தலை வேண்டி நிற்கின்றோம். இந்தச் சூழ்நிலையில், நாம் விதைத்த வாக்குகளின் கடந்தகால அறுவடைகள், எவ்விதம் உள்ளன என்பதை கணக்கிட்டுப் பார்ப்பது காலத்தின் தேவையாகும்.

உள்ளூராட்சி சபைகள்தான் நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பின் அடித்தளமாக உள்ளன எனலாம். பெரும்பாலும் இங்கிருந்துதான் மாகாண சபைக்கும் பாராளுமன்றத்துக்குமான மக்கள் பிரதிநிதிகள் உருவாகின்றார்கள்.

எனவே, நாட்டில் உண்மையான 'கட்டமைப்பு மாற்றம்' ஒன்று உருவாக வேண்டும் என்றால், அது அடிமட்டத்தில் இருந்து இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில், தற்போது ஆயுட்காலம் முடிவுற்றுள்ள உள்ளூராட்சி சபைகள், தலைவர்கள், உறுப்பினர்களின் செயற்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியது கட்டாயமாகின்றது.

பல சபைகளும் கணிசமான உறுப்பினர்களும் கடந்த ஐந்து வருடங்களில் தம்மால் முடிந்தளவு மக்களுக்கு சேவையாற்றி இருக்கின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆனால், ஜனநாயக வழிமுறை ஒன்றின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகளவான பிரதிநிதிகள், அதற்கு மாற்றமான முறையில் காலத்தைக் கடத்திவிட்டுச் சென்றிருக்கின்றார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது.

அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு, மக்களை ஏமாற்றுகின்ற பாணியிலும் சட்டத்துக்குப் புறம்பாகவும் செயற்பட்ட அனைவரது நடவடிக்கைகளும் அறிக்கையிடப்பட்டு அவர்கள் மீது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உள்ளூராட்சி சபை தலைவர், உறுப்பினர்கள் செய்த சமூக விரோத காரியங்கள், சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றி நாம் அறிவோம். சபைகளில் இடம்பெற்ற ஊழல்கள் பற்றியும் நிறைய குற்றச்சாட்டுகள் உள்ளன. இதன் ஆகப் பிந்திய சம்பவமாக, கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடியைக் குறிப்பிடலாம்.

அதேபோல், உள்ளூராட்சி சபை தலைவர்கள், உறுப்பினர்கள் என்ற கோதாவில் சண்டித்தனம் பேசியவர்கள், சமூக விரோத செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள், மண் அகழ்தல் போன்ற வருமான மையக் காரணங்களுக்காக அதிகாரத்தைப் பயன்படுத்தியோர், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாம் இன்னும் அறியாதவை ஏராளம் இருக்கலாம் என்ற அடிப்படையில், அனைத்து விடயங்களும் மீள்வாசிப்பு செய்யப்பட்டு, நல்ல உறுப்பினர்களும் பொருத்தமற்ற உறுப்பினர்களும் அடையாளப்படுத்தப்பட வேண்டும். அதன்மூலம் இனியாவது மக்கள் சரியான தெரிவுகளை மேற்கொள்ளலாம்.

ஒரு பாடசாலை மாணவனுக்கு வருட இறுதியிலும் தவணை முடிவிலும் முன்னேற்ற அறிக்கை வழங்கப்படுகின்றது. ஓர் ஊழியனுக்கு தகைமைகாண் சேவைக்காலம் என்று உள்ளது. அக்காலத்தில், அவரது செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டே தொழில் உறுதிப்படுத்தப்படும். அதுமட்டுமன்றி, ஒவ்வோர் ஊழியரின் மீதும் வருடாந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது வழக்கமாகும்.

எனவே, அரசியல் ஆளுகைக் கட்டமைப்பிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். தேர்தல் என்பது ஜனநாயகத்தின் கதவாக இருப்பது சரிதான். ஆனால், அந்த கதவின் வழியாக உள்ளே வருபவர்கள், என்ன வேண்டுமென்றாலும் செய்து விட்டுப் போகலாம் என்று இருந்து விட முடியாது.

தேர்தல் மற்றும் ஜனநாயகத்தின் உண்மையான பிரதிபலன்களை மக்கள் அனுபவிக்கும் வகையில் உள்ளூராட்சி சபைகள் தொடக்கம், மாகாண சபைகள், பாராளுமன்றம் வரை அனைத்து ஆளுகைக் கட்டமைப்புகளும் பொறுப்புடன் செயற்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்கான பொறிமுறை உருவாக்கப்படுவதும் முக்கியமானது.

ஓர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர், மக்களுக்கு சேவையாற்றாமல், கள்ளத்தனமான காரியங்களில் ஈடுபட்டு விட்டு, கடைசியில் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து விடுவாராயின் அல்லது மக்கள் அவருக்கு பாடம் புகட்டவில்லை என்றால், அதன் தொடர் விளைவுகள் மிக மோசமானவையாக இருக்கும்.

அந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர், அடுத்த முறை இதே கள்ளத்தளத்தோடு மாகாண சபைக்கும், பின்னர் பாராளுமன்றத்துக்கும் போக எத்தனிப்பார். சமகாலத்தில், இவரை விட கள்ளத்தனமான, சமூக சிந்தனையற்ற அரசியல்வாதிகள் அடுத்த உள்ளூராட்சி தேர்தலில் புதிதாக களமிறங்குவார்கள்.

இது பெருமளவுக்கு இலங்கை அரசியலில் நடந்தேறி விட்டது. இதனை மாற்ற வேண்டியுள்ளது. நாட்டின் ஆட்சியாளர்களை, அவர்களின் போக்குகளை திருத்த வேண்டுமாயின் அதற்கான படிமுறைகள் உள்ளூராட்சி சபைகளில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதன்படி, இப்போது ஆட்சிக்காலம் முடிவுற்றுள்ள உள்ளூராட்சி சபைகளிடம் இருந்தும், அதன் உறுப்பினர்களிடம் இருந்தும் தனித்தனியான முன்னேற்ற அறிக்கை கோரப்பட்டு, அது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதுமட்டுமன்றி, சபைகளின் செயற்பாடுகள் பற்றிய மக்களின் கருத்தும் அறியப்பட வேண்டும்.

இப்போதாவது அரசும் மக்களும் விழித்துக் கொள்ளவில்லை என்றால் எதிர்காலம் இன்னும் மோசமானதாக இருக்கும். இதைவிட மோசமான அரசியல்வாதிகள் உள்ளூராட்சி சபைகளில் இருந்து, பாராளுமன்றம் வரை சென்று, மக்களை மறந்து ஆட்சி செய்வார்கள்.

அந்தவகையில், இன்னுமோர் உள்ளூராட்சித் தேர்தலுக்கு அவதிப்படுவதை விட, இது அவசரமாகச் செய்யப்பட வேண்டிய பணியாகும்.



## வாழ்வியல் தரிசனம்

அரசியல்வாதிகளில் அநேகர், தாங்கள் அரசியல் செய்கின்றோம் என்பார்கள். அரசியல் செய்வது என்பதில் என்ன அர்த்தம் இருக்கின்றது? இது என்ன பொருளா, செய்வதற்கு? மக்களுக்கு நீதியான முறையில் சேவை புரிவதே அரசியலாகும்.

மக்களை ஏமாற்றுபவர்கள் அர்த்தம் புரியாதபடி, வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள்; நடிப்பார்கள். காலத்துக்காலம் கூட்டுவைப்பார்கள். அப்பொழுது ஒருவரை ஒருவர் புகழ்வார்கள். காலப்போக்கில் கூடியிருந்தவர்களுடன் பகைத்தும் புகழ்ந்தவர்களையே திட்டுவார்கள். இது இன்று மட்டுமல்ல; அன்றலிருந்து தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. சுயநலமற்ற பணிகளைச் செய்பவர்களே தியாகிகள். தன்னலம் பாராத உத்தமமான அரசியல்வாதிகளின் வரலாறுகள், இன்னமும் உயிர்ப்புடன் துலங்குகின்றன.

ஊழல் குற்றங்கள் செய்தவர்கள், மீண்டும் பொதுப்பணிகளில் ஈடுபடக்கூடாது. மக்களை ஏமாற்றுவது கடவுளுக்குப் பிடிக்காது. நீதிக்குப் புறம்பானவர்கள் எதிர்வினைகளில் இருந்து தப்பிக்க முடியாது. உணர்வார்களா?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானைகளின் அச்சத்தால்

### இரவில் இடம்பெயரும் கிராமமக்கள்

பொத்துவில் பிரதேசத்துக்கு உட்பட்ட சர்வோதயபுரம், செங்காமம் ஆகிய பிரதேசங்களில், காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால், அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் பீதியுடன் காணப்படுகின்றனர்.

பீதியின் காரணமாக மக்கள், மாலை நேரங்களில் தங்களின் குடியிருப்பை விட்டு குழந்தைகளுடன் வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று, காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு யானைகளின் அதிகரித்த நடமாட்டத்தால் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாத நிலை காணப்படுவதுடன், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோரும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் காட்டு யானைகள் வீடுகள், வீட்டுத் தோட்டங்கள், சேனைப் பயிர்கள் போன்ற வாழ்வாதாரப் பயிர்களை சேதப்படுத்தி வருவதால் பொருளாதார ரீதியாகவும் சர்வோதயபுரம், செங்காமம் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, பொத்துவில், ஆத்திமுனை, சர்வோதயபுர கிராமத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் அங்கிருந்த வீடு ஒன்றை முற்றாகச் சேதமாக்கியுள்ளன. வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

இவ்வாறு தினசரி சம்பவிக்கும் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்த, இதுவரை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச செயலாளர், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பாதிக்கப்படும் கிராமங்களின் மக்கள் கேட்டுள்ளனர்.

எம்.எஸ்.எம் ஹனீபா

# ஐஸ்வர்யாவின் புகார்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா ரஜினிகாந்த், லைகா நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வரும் 'லால் சலாம்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

இந்த நிலையில் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் தனது நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை காணவில்லை என புகார் அளித்துள்ளார். ஐஸ்வர்யா ரஜினிகாந்த் வீட்டின் லொக்கரில் இருந்த 60 பவுன் நகை, வைரம், நவரத்தின கற்கள் ஆகியவை மாயமாய் உள்ளதாக அவர் புகார் அளித்துள்ளது பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் அளித்த புகாரின் அடிப்படையில் தேனாம்பேட்டை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.,


## தயாரிப்பாளர் மகளுடன் அசோக் செல்வன் காதல்?

விஜய் சேதுபதி நடிப்பில் நலன் குமாரசாமி இயக்கத்தில் உருவான 'சூது கவ்வும்' என்ற திரைப்படத்தில் அறிமுகமான அசோக் செல்வன் அதன் பிறகு 'தெகிடி'படத்தின் மூலம் ரசிகர்களின் மனதை வென்றார்.

இதனை அடுத்து 'ஓமை கடவுளே உள்பட ஒரு சில படங்களில் நடித்த அசோக் செல்வன் அண்மையில்'நித்தம் ஒரு வானம்' என்ற படத்தில் நடித்தார்.

இந்த நிலையில் நடிகர் அசோக் செல்வன் பிரபல தயாரிப்பாளர் ஒருவரின் மகளை காதலித்து வருவதாகவும் இந்த காதலுக்கு இரு வீட்டாரும் பச்சை கொடி காட்டி விட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் அசோக் செல்வனின் திருமணம் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

நடிகர் அசோக் செல்வன் தற்போது நீலம் புரடொக்சன்ஸ் நிறுவனத்தில் தயாரிப்பில் உருவாகி வரும் ஒரு படத்திலும், 'நெஞ்சமெல்லாம் காதல்' என்ற படத்திலும் நடித்து வருகிறார்.





## 'பாபநாசம் 2' க்கு முன்பே 'பாபநாசம் 3' ரிலீஸ்?

ஜீத்து ஜோசப் இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் உருவான 'த்ரிஷயம்' திரைப்படம் கடந்த 2013 ஆம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்றது. மேலும் இந்த படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி உள்பட பல மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டது.

தமிழில் கமலஹாசன் கௌதமி நடிப்பில் 'பாபநாசம்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டு வெளியானது. இந்த நிலையில் 'த்ரிஷயம்' படத்தின் இரண்டாவது பாகம் கடந்த 2021 ஆம் ஆண்டு மலையாளத்தில் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்றது.

'த்ரிஷயம்' படத்தின் இரண்டாவது பாகமும் தெலுங்கு கன்னடம் ஹிந்தி ஆகிய மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டதுடன், தமிழில் மட்டும் ரீமேக் காலதாமதமாகி வருகிறது.


இந்த நிலையில் தற்போது 'த்ரிஷயம் 3' படத்தை உருவாக்க ஜித்து ஜோசப் திட்டமிட்டுள்ள நிலையில் முதல் பாகத்தில் நடித்த மோகன்லால் மீனா நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் அந்தந்த மொழிகளில் உள்ள பிரபல நடிகர்களை வைத்து இயக்க இருப்பதாகவும் ஒரே நாளில் அனைத்து மொழிகளிலும் 'த்ரிஷயம் 3' படத்தை வெளியீடு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனவே தமிழில் 'பாபநாசம் 2' திரைப்படம் வருவதற்கு முன்பே 'பாபநாசம் 3' திரைக்கு வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

## சமந்தாவின் வேற லெவல்





நடிகை சமந்தா கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மயோசிட்டிஸ் என்ற நோயால் பாதிக்கப்பட்டு அதற்காக சிகிச்சை எடுத்தார். தற்போது அந்த நோயிலிருந்து அவர் முழுமையாக விடுபட்டு மீண்டும் உடற்பயிற்சி செய்து வருகிறார்.

இந்த நிலையில் வேற லெவலில் உடற்பயிற்சி செய்யும் புகைப்படத்தை சமந்தா தனது இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ள நிலையில் இந்த புகைப்படத்திற்கு உறுதியான பெண் என பிரபல நடிகை ரகுல் ப்ரீத்தி சிங் கமெண்ட் செய்துள்ளார்.

அவர் மட்டுமின்றி வேறு சில நடிகைகளும் இந்த புகைப்படத்திற்கு தங்களது கருத்துக்களை பதிவு செய்து வருகின்றனர். இந்த நிலையில் சமந்தா நடித்த 'சாகுந்தலம்' என்ற திரைப்படம் ஏப்ரல் 14ஆம் திகதி வெளியாக இருக்கும் நிலையில் இந்த படத்தின் புரமோஷன் பணிகளை சமந்தா கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குடும்பத்துடன் தமிழ் நடிகர் இயற்கை விவசாயம்



தனுஷ் நடித்த 'பொல்லாதவன்' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானவர் நடிகர் கிஷோர். 'ஜெயங்கொண்டான்' 'சிலம்பாட்டம்' 'வெண்ணிலா கபடி குழு' 'போர்க்களம்' உள்பட பல படங்களில் நடித்துள்ளார்.

தனது கல்லூரி கால தோழியான விசாலட்சுமி என்பவரை திருமணம் செய்து கொண்ட கிஷோருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் படப்பிடிப்பு போக மீதம் உள்ள நேரங்களில் அவர் தனது குடும்பத்துடன் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுவதில் மிகுந்த விருப்பம் கொண்டவர்.

அதுமட்டுமின்றி தனது குழந்தைகளுக்கும் அவர் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை



சொல்லிக் கொடுத்து வளர்த்து வருகிறார். லாப நோக்கத்திற்காக இல்லாமல் இந்த இயற்கை விவசாயத்தை தான் செய்து வருவதாக பல பேட்டிகளில் கிஷோர் கூறியுள்ளார்.

மேலும் பெங்களூரில் இயற்கை விவசாயத்தில் விளைந்த பொருட்களை விற்பனை செய்யும் கடையும் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நடிகர் கிஷோர் தனது மனைவி மகன்களுடன் இயற்கை விவசாயம் செய்யும் புகைப்படங்கள் இணையதளங்களில் வைரலாகியுள்ளன.

கன்னியாகுமரி

# ஆபாச வீடியோ விவகாரம்: மதபோதகர் கைது

ஆபாச வீடியோ சர்ச்சையில் சிக்கி தலைமறைவாகி இருந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மதபோதகர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவாலயமொன்றில் பணியாற்றிவந்த 'பெனடிக்ட் ஆன்டோ ' என்ற 29 வயதான மதபோதகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குறித்த தேவாலயத்திற்கு வரும் பெண்களுடன் அன்பாகப் பழகி அவர்களைத் தனது காதல் வலையில் விழ வைத்து, அவர்களது அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பெற்று, அதன் பின்னர் குறித்த வீடியோக்களை இணையத்தில் வெளியிட்டு விடுவதாக மிரட்டி அவர்களை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர்






'பாதிரியாரின் லீலைகள்' என்ற பெயரில் அம்மதபோதகர், இளம்பெண்களுடன் இருந்த ஆபாச வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண்கள் சிலர், இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததைத் தொடர்ந்து, குறித்த மதபோதகர் அப்பகுதியை விட்டுத் தலைமறைவாகினார்.

இந்நிலையில் பொலிஸாரின் தீவிர தேடுதலின் பின்னர், நாகர்கோவிலில் பண்ணைவீட்டில் தலைமறைவாக இருந்த பெனடிக் ஆன்டோவை நேற்றய தினம்(20) பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை

## நகைகள் மாயம்: ஐஸ்வர்யா ரஜினிகாந்த் புகார்



"வீட்டு லொக்கரில் இருந்த 60 பவுன் நகைகள், வைரம், நவரத்தின கற்கள் என்பன மாயமாகியுள்ளதாக" நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

மேலும் குறித்த புகாரில் `லொக்கரில் இருந்த நகைகள் குறித்து வீட்டில் பணிபுரியும் 3 பணியாளர்களுக்கும் தெரியும்` எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

டெல்லி

## துண்டு துண்டுகளாக வெட்டப்பட்ட பெண்ணின் சடலம் மீட்பு

டெல்லியில் பெண்ணின் தலை உட்பட உடல் பாகங்கள் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு, பிளாஸ்டிக் பையில் கண்டெடுக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியின் சராய் காலே கான் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் அழுகிய நிலையில் பொலிஸாரினால் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார், "கொல்லப்பட்ட பெண் யார்?" என்பதைக் கண்டறியும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் அப்பகுதி



மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியில்கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 'ஷ்ரத்தா' என்ற இளம்பெண்ணை ,அவரது காதலன் அஃப்தாப் அமீன் என்பவர் கொலை செய்து, 35 துண்டுகளாக வெட்டி வீசிய சம்பவம் இந்தியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பீகார்



## ஒன்லைன் நண்பரால் சிறுமிக்கு நேர்ந்த கொடூரம்

பீகாரின், பங்கா மாவட்டத்தைச் சேர்ந்தவர் 'நிதீஷ் குமார்'. இவர் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியொருவருடன் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளம் மூலம் நட்பாகப் பழகி வந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த மார்ச் 16ஆம் திகதி அன்று தன்னை தனியாக நேரில் வந்து சந்திக்குமாறு அச்சிறுமியை நதீஷ் அழைத்துள்ளார்.

சிறுமியும் தனது பெற்றோரிடம் உண்மையை மறைத்து வேறு தோழியை பார்க்க செல்வதாகக் கூறி நிதீஷ் குமாரை பார்க்க அவரது ஊருக்கு சென்றுள்ளார்.

அப்போது நிதீஷ் குமாருடன் அவரது உறவுகார இளைஞர் சதாசிவ் மற்றும் நண்பர் விகாஸ் குமார் ஆகியோரும் உடன் வந்துள்ளனர். இந்நிலையில் சிறுமியிடம் நயமாக பேசி தனியாக ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்ற மூவரும், அவரை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு, அங்கிருந்து

> **கடந்த மார்ச் 16ஆம் திகதி அன்று தன்னை தனியாக நேரில் வந்து சந்திக்குமாறு அச்சிறுமியை நதீஷ் அழைத்துள்ளார்.**

தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி தனது வீட்டிற்கு சென்று நடந்த உண்மையை கூறியுள்ளார்.

அதைத் தொடர்ந்து, தோரியா பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் பெற்றோர் புகார் அளித்தனர். அதன்பேரில் சிறுமியின் வாக்குமூலத்தை பெற்ற பொலிஸார் குறித்த மூன்று இளைஞர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

டெல்லி

## காதல் பிரிவுக்குக் காப்புறுதி

காதல் பிரிவினால் ஏற்படும் மனச் சோர்வினைப் போக்க, காதல் ஜோடியொன்று 'Heatbreak Insurance Fund' என்ற காப்புறுத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

'பிரதீக் ஆர்யன்' என்பவரே இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

ஆர்யன் அவரது காதலியுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்துள்ளார். குறித்த ஒப்பந்தத்தின் படி, இருவரும் இணைந்து வங்கியில் புதிய கணக்கு ஒன்றைத் தொடங்கியுள்ளனர். மாதம் 500 ரூபாய் அதில் செலுத்தியுள்ளனர். இறுதியில் இவர்கள் பிரிந்தால் யார்



ஏமாற்றுகின்றாரோ அவர் அப்பணத்தை விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

அந்தவகையில் ஆர்யனின் காதலி விட்டுச்சென்றதால் அவருக்கு 25,000 ரூபாய் கிடைத்ததாக அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேசம்



## "டிக்கெட் எடுப்போம், பயணிக்க மாட்டோம்"

" வட இந்தியர்கள் ரெயிலில் பயணச் சீட்டு எடுக்காமல் பயணிக்கின்றனர்"என்ற வெறுப்பு பேச்சுகள் பரவிவரும் இச்சூழலில், பயணச் சீட்டு எடுத்தும் ரெயிலில் பயணிக்காத மக்கள் குறித்த தகவல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தர பிரதேசம், ப்ரக்யராஜில் தயால்பூர் என்ற பகுதியில் உள்ள புகையிரத நிலையத்திலேயே இடம்பெற்று வருகின்றது.

இதற்கான காரணம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்தியப் பிரதமராக நேரு இருந்த கால கட்டத்தில், அவர் ரயில்வே அமைச்சராக இருந்த லால் பகதூர் சாஸ்திரியிடம் தயால் பூரில் ஒரு புகையிரத நிலையத்தை வலியுறுத்தினார்.

1954 ஆம் ஆண்டு குறித்த புகையிரத நிலையமும் ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 50 ஆண்டுகள் செயல்பட்டது. குறைந்தபட்ச வருவாயைக் கூட ஈட்டாத காரணத்தினால் அது 2006 மூடப்பட்டது. 2022 மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு நிர்வாகம் ஒப்புக் கொண்டது.

மீண்டும் மூடிவிழா கண்டுவிடக்கூடாது என்பதற்காக அப்பகுதி மக்கள் ரெயிலில் பயணிக்காமலே பயணச்சீட்டு எடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கைக்கெதிரான

# தொடரை 2-0 எனக் கைப்பற்றிய நியூசிலாந்து

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என நியூசிலாந்து கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே நியூசிலாந்து வென்ற நிலையில், வெலிங்டனில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இப்போட்டியையும் நியூசிலாந்து வென்றமையைத் தொடர்ந்தே தொடரை 2-0 என நியூசிலாந்து கைப்பற்றியது.

நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை, சகல விக்கெட்டுகளையும் இழந்து 358 ஓட்டங்களையே பெற்ற நிலையில் இனிங்ஸ் மற்றும் 58 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், தனஞ்சய டி சில்வா 98, தினேஷ் சந்திமால் 62, குசல் மென்டிஸ் 50, நிஷான் மதுஷ்க 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அணித்தலைவர் டிம் சௌதி, பிளையர் டிக்னர் ஆகியோர் தலா 3, மிஷெல் பிறேஸ்வெல் 2, மற் ஹென்றி, டஃப் பிறேஸ்வெல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகன்கான ஹென்றி நிக்கொல்ஸும், தொடரின் நாயகனாக கேன் வில்லியம்ஸனும் தெரிவாகினர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

நியூசிலாந்து: 580/4 (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்ஸன் 215, ஹென்றி நிக்கொல்ஸ் ஆ.இ 200, டெவோன் கொன்வே 78 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 2/126, தனஞ்சய டி சில்வா 1/75, பிரபாத் ஜெயசூரிய 1/86)

இலங்கை: 164/10 (துடுப்பாட்டம்: திமுத் கருணாரத்ன 89, தினேஷ் சந்திமால் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 3/44, மிஷெல் பிறேஸ்வெல் 3/50, டஃப் பிறேஸ்வெல் 1/19, பிளையர் டிக்னர் 1/21, டிம் சௌதி 1/22)

இலங்கை (பொலோ ஒன்): 358/10 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 98, தினேஷ் சந்திமால் 62, திமுத் கருணாரத்ன 51, குசல் மென்டிஸ் 50, நிஷான் மதுஷ்க 39 ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 3/51, பிளையர் டிக்னர் 3/84, மிஷெல் பிறேஸ்வெல் 2/100, டஃப் பிறேஸ்வெல் 1/58, மற் ஹென்றி 1/59)

போட்டியின் நாயகன்: ஹென்றி நிக்கொல்ஸ்

தொடரின் நாயகன்: கேன் வில்லியம்ஸன்



## பதவி விலகும் திமுத் கருணாரத்ன?

அயர்லாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறுவதைத் தொடர்ந்து இலங்கையணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் பதவியிலிருந்து விலக திமுத் கருணாரத்ன விலக விரும்புகின்றார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களுக்கும் கருணாரத்னவுக்குமிடையே இக்கலந்துரையாடல் இடம்பெறுகின்ற நிலையில், இதை இதுவரையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது.



இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இந்தியாவைச் சுருட்டிய அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இந்தியா: 117/10 (26 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 31 (35), அக்ஸர் பட்டேல் ஆ.இ 29 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 5/53, ஷோன் அபொட் 3/23, நாதன் எலிஸ் 2/13)

அவுஸ்திரேலியா: 121/0 (11 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் ஆ.இ 66 (36), ட்றெவிஸ் ஹெட் ஆ.இ 51 (30) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: மிற்செல் ஸ்டார்க்

ஸ்பானிய லா லிகா தொடர்: எல் கிளாசிகோவில்



## றியல் மட்றிட்டை வென்ற பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட்டுடனான “எல் கிளாசிகோ” என்றழைக்கப்படும் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக, சேர்ஜெய் றொபேர்ட்டோ, பிராங்க் கெஸி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

காரைதீவு வி.க தொடர்:

## சம்பியனான சொறிக்கல்முனை சாந்தகுறொஸ்

காரைதீவு சகா





காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக் கழகமும், விபுலானந்த சனசமூக நிலையமும் இணைந்து விபுலானந்த விளையாட்டுக் கழகத்திலிருந்து உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்தமாக நடாத்திய கால்பந்தாட்டத் தொடரில் சொறிக்கல்முனை சாந்தகுறொஸ் அணி சம்பியனானது.

காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற எட்டு அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில், சம்மாந்துறை எவகிறீன் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றே சாந்தகுறொஸ் அணி சம்பியனாகி வெற்றிக் கேடயத்தையும், 25,000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக் கொண்டது.

# 522 பேரை பலியெடுத்த ஃப்ரேடி



தென் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் கடந்த மாதம் ‘ஃப்ரேடி(Freddy)‘எனப்படும் புயல் உருவானது.

இப்புயலானது பல நாட்களாகத் தொடர்ந்து நீடித்து வருவதால் ”மொசாம்பிகியூ, மடகாஸ்கர், மலாவி” ஆகிய நாடுகளில் கனமழைபெய்து வருகின்றது.

இந்நிலையில் இக்கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் சுமார் 522 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும்,1000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 438 உயிரிழப்புகள் மலாவியில் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இப்புயல் தொடர்ந்து நீடித்து வருவதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகின்றது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களை மீட்கும் நடவடிக்கையில் மீட்பு குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.



## பஸ் கவிழ்ந்து கோர விபத்து; 17 பேர் உயிரிழப்பு


பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நேற்றைய தினம்(20) பஸ்ஸொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாதில் 17 பேர் உயிரிழந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மதாரிபூர் என்ற பகுதியில் உள்ள நெடுஞ்சாலையிலேயே இக்கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், 25 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்


## சிறையில் சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை




ஈரானில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறுமிகள், பாலியல் வன்கொடுமை மற்றும் மின்சார அதிர்ச்சி போன்ற கடுமையான சித்திரவதைகளை அனுபவித்து வருவதாக மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈரானில் ஹிஜாபிற்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஈரான் அரசு கைது செய்துள்ளது. போராட்டக்காரர்கள் சிலருக்கு தூக்கு தண்டனையும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈரான் சிறையில் பாலியல் வன்கொடுமை, மின்சார அதிர்ச்சி போன்ற கடுமையான சித்திரவதைகள் சிறுமிகளுக்கு இடம்பெற்றுவருவதாகவும், குறிப்பாக இராணுவத்தினரிடம் சிக்கி சிறையில் அடைக்கப்பட்ட 12 வயதான சிறார்கள் கடுமையான கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

## குடும்பத்தினருக்கு இதய கறி

நபர் ஒருவர் பெண்ணின் இதயத்தை வெட்டி தனது உறவினர்களுக்கு சமைத்துக் கொடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

44 வயதான லாரன்ஸ் பால் ஆண்டர்சன் என்பவரே இக் கொடூரத்தைப் புரிந்துள்ளார். கடந்த 2021 ஆம் ஆண்டு போதைப்பொருள் வழக்கில் சிக்கி சிறை தண்டனை அனுபவித்து வந்தஅவர் அண்மையில் விடுதலையானார்.

இந்நிலையில் விடுதலையான அன்றே ஆண்ட்ரியா லின் பிளாங்கன்ஷிப் என்ற பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்த அவர்,அப்பெண்ணை கத்தியால் குத்திக் கொலைசெய்து, அவரது இதயத்தை மாத்திரம் தனியாக வெட்டி தனது உறவினரது வீட்டுக்கு எடுத்துச் சென்று இதயத்தை உருளைக்கிழங்குடன் சேர்த்து சமைத்து பரிமாறியுள்ளார்.

அதன் பின்னர் அவர்களையும் கொடூரமாக் கொலைசெய்துள்ள அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். எனினும் அவரது கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை. இந்நிலையில் அவரது வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இத்தாலி

## ஒரே பாலின பெற்றோருக்குத் தடை







இத்தாலியில் செயற்பட்டுவரும் புதிய வலதுசாரி அரசாங்கம், அந்நாட்டின் பாரம்பரிய சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

இதன் ஒருபடியாக, ஒரே பாலின பெற்றோரின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்ப்பால் ஓரினச்சேர்க்கை தம்பதிகளுக்கு தத்தெடுக்கும் உரிமை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதோடு, வாடகை தாய் மூலம் குழந்தை பெற்றெடுக்கும் முறைக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதசாரி சதுக்கத்தில் கடந்த சனிக்கிழமையில் இருந்து நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரம் முழுவதும் வானவில் கொடிகளை அசைத்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்கா

## ஆபாச நடிகை விவகாரம்: ட்ரம்ப் கைது?



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாலியல் நடிகை ஸ்டாமி டேனியல் (Stormy Daniels) என்பவருடன் நெருக்கமாக இருந்ததாக 2016 ஆம் ஆண்டு நடந்த தேர்தல் நேரத்தில் கூறப்பட்டது.

இத் தகவல் அப்போதைய தேர்தல் களத்தில் பூதாகரமாக வெடித்தது. அதனை மறைப்பதற்காக நடிகைக்குத் தேர்தல் பிரச்சார நிதியிலிருந்து ட்ரம்ப் பணத்தை கொடுத்ததாகவும் கூறப்பட்டு அவர் மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு மன்ஹாட்டான் மாவட்ட வழக்கறிஞர் அலுவலகத்தில் விசாரணையிலுள்ளது.

இந்நிலையில் ட்ரம்பின் முன்னாள் வழக்கறிஞரான மைக்கேல் கோஹன், இந்த வழக்கில் ட்ரம்பிற்கு எதிராக சாட்சியளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் நடிகைக்குப் பணம் வழங்கியதிற்கான ஆதாரத்தையும் வழக்கறிஞர் அலுவலகம் கைப்பற்றியுள்ளதாகத் தெரிகிறது.

இதனிடையே, வழக்கு விசாரிக்கப்படும் வழக்கறிஞர் அலுவலகத்தில் இருந்து கசிந்த ரகசிய ஆவணங்களை மேற்கோள்காட்டி ட்ரம்ப், தான் மார்ச் 21 ஆம் நாள் கைது செய்யப்படவுள்ளதாகக் கூறியுள்ளார்.

மேலும் அவரின் ஆதரவாளர்களைப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும் என்று பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 21 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.